In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.280/2021 நாள் : 20.09.2024

வா.சா.1 (தங்கராஜ்) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

எனது தகப்பனார் பெயர் சடையப்ப கவுண்டர் என்கிற பொன்னியா கவுண்டர் ஆவார். எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் முத்துசாமி, ஆறுமுகம், பாப்பாத்தி என்றால் சரிதான். மேற்படியார்களின் தகப்பனார் கருப்பக்கவுண்டர் என்றால் சரிதான். மேற்படியார்களின் தாயார் பெயர் பாவாயி என்றால் சரிதான். சடையப்ப கவுண்டர் என்கிற பொன்னியா கவுண்டரின் வாரிசுதான் நான் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த சகோதரி தாயம்மாள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் கன்னியம்மாள். எனது தாயார் மற்றும் எனது சகோதரி இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது சகோதரி தாயம்மாளின் கணவர் பெயர் மாரப்பன் என்றால் சரிதான். மாரப்பனின் வாரிசுகள் சரவணக்குமார், செல்வம் ஆவார்கள். இவர்கள் இந்த வழக்கில் 5, 6 பிரதிவாதிகளாக உள்ளனர். இந்த வழக்கில் 3-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியும். பிராதில் உள்ள சங்கதிகளை எல்லாம் எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். தாவாவில் மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் தெரியாது. தாவாவில் மொத்தம் எத்தனை சர்வே எண்கள் உள்ளது என்றால் தெரியாது. சுமார் 40 சர்வே எண்களுக்கு மேல் இருக்கும். தாவா சொத்துக்களின் சக்குபந்தி விவரம், அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் எனது தந்தையாரும், எனது

தந்தையாரின் தகப்பனாரும், என் தந்தையாரின் தாயார் பாவாயி என்பவரும் கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். பாவாயி, பாப்பாத்தி, 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதி மற்றும் வாதியின் தகப்பனாருக்கிடையே ஊர் பைசல் படி வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும், அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் பாவாயி மற்றும் பாப்பாத்திக்கு தொகை கொடுக்கப்பட்டது என்றால் பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை, பாவாயி மற்றும் பாப்பாத்தி பாகத்திற்கு தொகை கொடுக்கப்பட்டு அவர்கள் இருவரும் விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அந்த பைசலின்படி பாகப்பிரிவினை ஏற்பட்டு சொத்துக்களை நாங்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் சர்வே எண்.192–ல் தனியாக பேர்வெல் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எல்லோரும் சேர்ந்து பொதுவாகத்தான் போட்டுள்ளோம். அந்த போர்வெல்–க்கான மின் இணைப்பு என்பபெயரில் தனிப்பட்ட முறையில் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு என்னுடைய பெயரில் வரிவிதிப்பு உள்ளது என்றால் சரிதான். அது நத்தத்தில் உள்ளது. அதற்கான வீட்டுவரி ரசீது என் பெயரில் உள்ளது. அவ்வாறு வீட்டுவரி ரசீது பெற்று சுமார் 30 ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். அந்த வீட்டிற்கான வீட்டு வரி ரசீதை தொடர்ந்து நான் என்பெயரில் செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். போல்வெல்லில் உள்ள மின்இணைப்பு என் பெயரில் உள்ளபோதிலும் அதை பொதுவாகத்தான் அனுபவித்து வருகிறோம். தார்சு வீடு ஒரே வீடாக கட்டியுள்ளேன். அங்கு இரண்டு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தார்சு வீடு கட்டி சுமார் முப்பது வருடம் இருக்கும் என்றால் சுமார் 15 ஆண்டுகள் இருக்கும். எனக்கு

வாய்மொழியாக ஒதுக்கப்பட்ட இரண்டு மெத்தை வீட்டில் ஒரு வீட்டை எனது சகோதரிக்கு அனுபவத்தில் பிரித்து கொடுத்துவிட்டேன் என்றால் வாய்மொழி பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. அதன் பெயரில்தான் மாரப்பன் மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மாரப்பன் அந்த வீட்டை சுமார் 15 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார். பிரதிவாதிகள் யாரும் மாரப்பனின் அனுபவத்தை தடை செய்யவில்லை என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எப்போது அனுப்பினார் என்றால் 2018-ம் ஆண்டு அனுப்பியுள்ளார். நானும் வழக்கறிஞர் வைத்து பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. 06.12.2018-ம் தேதியில் கே.நந்தக்குமார் என்கிற வழக்கறிஞர் மூலம் 3-ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் இல்லை. சாட்சி தற்போது மேற்படி பதில் அறிவிப்பை நந்தக்குமார் வழக்கறிஞர் மூலம் அனுப்பியதாக கூறுகிறார். **அந்த அறிவிப்பு பி.வா.சா.ஆ.1 ஆகும்**. பி.வா.சா.ஆ.1 அறிவிப்பில் சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்று ஒப்புக்கொண்டு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி வாய்மொழியாக பிரிந்த சொத்துக்களை பொறுத்து தனது பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 3-ம் பிரதிவாதி அனுபவிப்பது எனக்கு இடையூறாக இருப்பதாக கருதி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதியின் பதிலுரையில் என்ன வாசகம் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் வழக்கறிஞரை கேட்டு அந்த விவரங்களை தெரிந்து கொண்டேன். 3-ம் பிரதிவாதியின் அனுப்பிய

அறிவிப்பில் கண்ட சொத்துக்கள் அனைத்தையும் இந்த வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா பிராதில் 3–ம் பிரதிவாதியின் அனுப்பிய அறிவிப்பில் கண்ட சொத்துக்கள் அனைத்தையும் இந்த வழக்கில் காண்பிக்கவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. விடுபட்ட சொத்துக்களை தாவா பிராதில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் 3–ம் பிரதிவாதிக்கும் சகஜமான உறவுமுறை உள்ளது என்றால் இல்லை. சுமார் 6–7 ஆண்டுகளாக இல்லை. தாவா தாக்கல் செய்த பின்னர் 2–ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வீட்டிற்கு துக்கம் அனுசரிக்க இறந்த அன்றே நான் சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு சென்று சுமார் இரண்டு ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். அதேபோல் முத்துசாமியும் துக்கம் அனுசரிக்க வந்திருந்தார் என்றால் சரிதான். 1997–ல் முத்துசாமி பெயரில் கிரையம் ஏற்பட்ட சொத்தானது தாவாவில் விடுப்பட்டுள்ளது என்றால் அது முத்துசாமி தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்தாகும். அந்த சொத்தை என்னுடைய அறிவிப்பில் காண்பித்துள்ளேன் என்றும், அந்த சொத்தை முத்துசாமியின் தனிப்பட்ட சொத்து என பொது அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு எந்தெந்த கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால் தாளம்பாடி மற்றும் காதப்பள்ளி கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது. காதப்பள்ளி கிராமத்தில் உள்ள என்னுடைய விவசாய நிலத்திற்கு நான் பயிர் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். கூட்டுறவு சொசைட்டியில் பயிர் கடன் வாங்கியுள்ளேன். அதன் சர்வே எண் தெரியுமா

என்றால் தெரியாது. சர்வே எண்.206/2பி, 206/2டி, 206/2ஜி, 206/2ஹெச், 206/3ஏ, 206/3டி, 209/1பி, 209/1டி ஆகியவைகளை காண்பித்து பயிர் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். பயிர் கடன் வாங்கிய சொத்தின் சக்குபந்தி மேற்கே போகும் தார் சாலைக்கு தெற்கு, வடக்கே போகும் பாதைக்கும் கிழக்கு, வடக்கே போகும் பாதைக்கும் மேற்கு, முத்துசாமியின் மகன் கிருஷ்ணசாமி நிலத்திற்கும் வடக்கு என்றால் சரிதான். இந்த நிலத்தை வைத்து நான் 30 ஆண்டுகளாக பயிர் கடன் பெற்று அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. சுமார் 4–5 ஆண்டுகளாத்தான் இருக்கும். 3–ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தில் உள்ள கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் சரியல்ல. மழைகாலத்தில் தண்ணீர் இருக்கும். ஊற்று இல்லை என்றால் தண்ணீர் வராது. அந்த சொத்தில் 3–ம் பிரதிவாதி போர் போட்டுள்ளார் என்றால் போட்டுள்ளார். அதை 3 பேரும்தான் அனுபவித்து வந்தோம். அந்த போர்வெல் எத்தனை அடி ஆழம் என்பது எனக்கு தெரியாது. அந்த போர்வெல் போட்டு சுமார் 4–5 ஆண்டுகள் இருக்கும். அந்த போர்வெல்–க்கு மின்இணைப்பு எதுவும் பெறவில்லை. அதற்கு என் சின்ன சித்தப்பா பெயரில் மின் இணைப்பு ஏற்பட்டுள்ளது. எங்களுக்குள் ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றும், வேண்டுமென்றே 3–ம் பிரதிவாதியின் ஆவணத்தை முறியடிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்ட சொத்தை மீண்டும் பாகம் பிரிக்க வேண்டியது அவசியம் என்றால் சரியல்ல. 3–ம் பிரதிவாதி பெற்ற தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு வில்லை வீடும், ஒரு கூரை வீடும், ஒரு கோழிப்பண்ணையும்

உள்ளது. சுமார் 20 ஆண்டுகளாக கோழிப்பண்ணை உள்ளது. தற்போது அந்த பண்ணையில் கோழிகள் எதுவும் இல்லை. அந்த கோழிப்பண்ணைகளை அப்புறப்படுத்தி 3–ம் பிரதிவாதி வீடுகட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதி பெயரில் வீட்டுவரி, மின்இணைப்பு, கிணற்று சர்வீஸ் உள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)